# கிளசிக் பற்று அட்டை

*பாவனையாளர் வழிகாட்டி*

## *தேவையான வேளையில்*

## *பணம் கிடைக்கும் வசதி*

# உள்ளடக்க அட்டவணை

பக்க இல.


| | | |
|---|---|---|
| 1. | HSBC கிளசிக் பற்று அட்டை | 1 |
| 2. | உங்கள் பற்று அட்டையின் பாவனை குறித்த முக்கிய தகவல்கள் | 3 |
| 3. | உங்கள் பற்று அட்டையின் பாவனைக்கான பயனுள்ள ஆலோசனைகள் | 6 |
| 4. | பற்று அட்டை விதிகள் மற்றும் நிபந்தனைகள் | 7 |

# 1. HSBC கிளசிக் பற்று அட்டை

## அட்டையின் முகப்பு

1. பற்று அட்டை இலக்கம்: இது உங்களுக்குப் பிரத்தியோகமான 16 எண்கள் கொண்ட அட்டை இலக்கம். வங்கியுடனான சகல தொடர்பாடல்களிலும் இந்த இலக்கத்தைக் குறிப்பிடவும்.

2. உங்கள் பெயர்: அட்டையின் முகப்பில் உங்கள் பெயர் சரியாகப் பொறிக்கப்பட்டுள்ளதா என்பதைப் பார்த்து உறுதிப்படுத்தவும்.

3. செல்லுபடியாகும் காலம் - காலாலவதியாகும் திகதி (மா/வ): அட்டை காலாவதியாகும் மாதம் மற்றும் வருடத்தைப் பார்க்கவும். குறிப்பிடப்பட்ட மாதத்தின் கடைசி நாள் வரை உங்கள் பற்று அட்டை செல்லுபடியாகும்.

4. VISA Electron / VISA Logo and Hologram: உலகின் எந்தப் பகுதியிலும் இந்த இலச்சினையைப் பார்வைக்கு வைத்துள்ள சகல வணிக நிறுவனங்களிலும் உங்கள் பற்று அட்டை ஏற்றுக்கொள்ளப்படும்.

5. இரத்திரனியல் பாவனை அடையாளக் குறி: கொள்வனவுக் கொடுக்கல் வாங்கலெனின், இலத்திரனியல் விற்பனையிட ஸ்வைப் (electronic point-of-sale swipe terminal) வசதி கொண்ட வணிக நிறுவனங்களில் மட்டுமே பற்று அட்டையைப் பயன்படுத்த முடியும். "காகித அச்சுப் பதிவு" அல்லது மின்னஞ்சல்/தொலைபேசி/இணையத்தள கொடுக்கல் வாங்கல்களுக்கு பற்று அட்டையைப் பயன்படுத்த முயல வேண்டாம்.


6. பிரதான கணக்கு இலக்கம் (PAN): இப் பற்று அட்டை இந்த இலக்கங்களினால் குறித்துரைக்கப்படும் பிரதான வங்கிக் கணக்குடன் இணைக்கப்பட்டுள்ளது.



# Back

7. காந்தப் பட்டி: உங்கள் பற்று அட்டை தொடர்பான முக்கியமான தகவல்கள் இதில் பதிந்து வைக்கப்படும். இப் பட்டி சேதமடையாமல் இருப்பதை உறுதிப்படுத்த, உங்கள் பறறு அட்டையைச் சுரண்டாமலும் காந்தம் அல்லது காந்தப் புலங்களுக்கு அருகில் கொண்டுசெல்லாமலும் பாதுகாக்கவும்.

8. கையொப்பக் கட்டம்: உஙகள் பற்று அட்டை கிடைத்ததும் அழிக்க முடியாத குமுழ்முனை பேனா (கறுப்பு நிறம் நல்லது) கொண்டு இக் கட்டத்தினுள் கையொப்பமிடவும். வணிக நிறுவனங்களில் கட்டணச் சீட்டில் நீங்கள் இடும் கையொப்பமும் பற்று அட்டையின் கையொப்பக் கட்டத்தில் இடப்பட்ட கையொப்பமும் ஒன்றாக இருக்க வேண்டும்.




9. தனிப்பட்ட அடையாள இலக்கம் (PIN): ATM கொடுக்கல் வாங்கல்களுக்காக உங்கள் பற்று அட்டையுடன் உங்கள் புதிய PIN இலக்கத்தைப் பயன்படுத்தலாம்.

## 2. உங்கள் பற்று அட்டையின் பாவனை தொடர்பான முக்கிய தகவல்கள் செயற்படுத்துதல்

உங்கள் தற்போதய ATM PIN இலக்கத்துடன் ஏதேனுமொரு உள்நாட்டு HSBC ATMஇல் அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் கொள்வனவுகளுக்காக உங்கள் பற்று அட்டையைச் செயற்படுத்த முடியும்.

4 4722 22 என்ற எமது 24 மணிநேர வாடிக்கையாளர் சேவை துரித அழைப்புத் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகத் தொடர்புகொண்டும் உங்கள் பற்று அட்டையைச் செயற்படுத்தலாம்.

### பாவனை வழிகாட்டுதல்கள

உங்கள் HSBC பற்று அட்டை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் செல்லுபடியாகும். இது செயற்றிறன் வாய்ந்தது. பயன்படுத்துவதற்கு எளிதானது.

வணிக நிறுவனங்களில் கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு ஒரு கடன் அட்டை போல இதனைப் பயன்படுத்தலாம். ஒரேயொரு வித்தியாசம் யாதெனில், கொடுக்கல் வாங்கல் தொகையானது நேரடியாக உங்கள் நடைமுறை அல்லது சேமிப்புக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

உங்கள் பற்று அட்டையை ஒரு ATM அட்டையாகவும் பயன்படுத்தலாம். ஆகவே, ATM அட்டை ஒன்றை வேறாகக் கொண்டுசெல்லத் தேவையில்லை.

### வணிக நிறுவனங்களில் பாவனை

உங்கள் பற்று அட்டையைப் பயன்படுத்தி உலகெங்கும் 29 மில்லியன்* VISA வணிக நிறுவனங்களில் பொருள்களையும் சேவைகளையும் இலகுவாகப் பெற்றறுக்கொள்ள முடியும். கீழே தரப்பட்டுள்ள எளிய படிமுறைகளைப் பின்பற்றுங்கள்.

1. வணிக நிறுவனத்தில் VISA/VISA Electron அடையாளச் சின்னம் இருக்கிறதா என்று பாருங்கள். வணிகரிடம் இலத்திரனியல் விற்பனையிட "card swiping terminal" இருக்க வேண்டும்.

2. கொள்வனவுகளைச் செய்த பின், உங்கள் பற்று அட்டையைச் சமர்ப்பியுங்கள்.

3. அதிகாரமளிப்பிற்காக, வணிகர் உங்கள் பற்று அட்டையை ஸ்வைப் (Swipe) செய்வார்.

4. அதிகாரமளிப்பு பெறப்பட்டதும், உங்கள் வங்கியானது கொடுக்கல் வாங்கல் தொகைக்குச் சமமான தொகையை உங்கள் கணக்கில் பிடித்துவைக்கும். பின்னர், இக் கொடுக்கல் வாங்கல் தொகை உங்கள் கணக்கில் பற்று வைக்கப்படும்.

5. உங்களுக்கு விற்பனைச் சீட்டு ஒன்று வழங்கப்படும்.

6. இந்த விற்பனைச் சீட்டைச் சரிபார்த்து அதில் கையொப்பமிடுங்கள். இக் கையொப்பம், பற்று அட்டையின் பின்புறத்திலுள்ள கையொப்பத்தை ஒத்ததாக இருக்க வேண்டும். அல்லது சீட்டைச் சரிபார்த்த பின்னர், உங்கள் வணிகர் கேட்கும் பட்சத்தில் உங்கள் பற்று அட்டையின் இலக்கத்தைப் பதியுங்கள்.

7. உங்கள் பற்று அட்டை உங்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படுவதை உறுதிப்படுத்துங்கள்.

கிளசிக் பற்று அட்டை வைத்திருப்பவர் என்ற முறையில், உங்கள் நாளாந்த கொடுக்கல் வாங்கல் உச்சவரம்பான ரூ.50,000/- வரை நீங்கள் பொருள்களைக் கொள்வனவு செய்யலாம். ஆனால், உங்கள் பிரதான கணக்கில் அதற்கேற்றவாறு போதிய பணம் இருக்க வேண்டும்.

**கவனிக்கவும்**

* உள்நாட்டில் செல்லுபடியாகும் பற்று அட்டை ஒன்றை நீங்கள் கேட்டிருந்தால், இலங்கையிலுள்ள வணிக நிறுவனங்களில் மாத்திரமே உங்கள் பற்று அட்டையைப் பயன்படுத்த முடியும் என்பதை நினைவில் வையுங்கள்.

## ATM பாவனை

இலங்கையிலுள்ள எந்தவொரு HSBC ATM இலும் நீங்கள் விரும்பும் மொழியைத் தெரிவு செய்யலாம். அத்துடன்,

- உரிய உச்சவரம்பிற்குள் பணத்தை மீளப்பெறலாம்.
- உங்கள் கடைசி 8 கொடுக்கல் வாங்கல்களுக்கான சிறிய கணக்கு விபரக்கூற்றைப் பெறலாம்.

- உங்கள் கணக்கு மீதியை அறியலாம்.
- கணக்கு விபரக்கூற்றுகளைக் கோரலாம்.
- கணக்குகளுக்கிடையே பணத்தைப் பரிமாறலாம்.
- PIN இலக்கத்தை மாற்றலாம்.
- காசோலைப் புத்தகம் ஒன்றைக் கோரலாம்.
- பணத்தை/காசோலையை வைப்புச் செய்யலாம். வங்கிக்குத் தபால் அனுப்பவும் முடியும்.
- உங்கள் பொதுவசதிக் கட்டணங்களைச் செலுத்தலாம்.
- உங்கள் கடன் அட்டைக் கொடுப்பனவுகளைச் செலுத்தலாம்.

**கவனிக்கவும்**

* உங்கள் பற்று அட்டையை வெளிநாடுகளிலுள்ள HSBC குழும ATM ஒன்றில் பயன்படுத்தினால், ரூ.300/-க்கு சமமான கொடுக்கல் வாங்கல் கட்டணமொன்று அறவிடப்படும். PLUS ATM ஒன்றில் அட்டையைப் பயன்படுத்தினால், உள்நாட்டு கொடுக்கல் வாங்கலுக்கு ரூ.50/- உம் சர்வதேசக் கொடுக்கல் வாங்கலுக்கு ரூ.400/- உம் அறவிடப்படும்.

* தற்போது அடையக்கூடிய பொதுவசதிக் கம்பனிகளின் பட்டியல் தேவைப்படின், 4 4722 00 என்ற எமது 24 மணிநேர வாடிக்கையாளர் சேவை துரித அழைப்புத் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகத் தொடர்புகொள்ளவும்.

* நாளாந்த ATM மீளப்பெறுகை மற்றும் பணப் பரிமாற்ற உச்சவரம்புகள்:

| **தற்போதய உச்சவரம்புகள்** | **(ரூ.)** |
|---|---|
| பண மீளப்பெறுகை | 50,000.00 |
| சொந்தக் கணக்குகளுக்கு இடையிலான பரிமாற்றம் | 1,000,000.00 |
| மூன்றாம் தரப்புப் பரிமாற்றம் | 200,000.00 |
| பொதுவசதிக் கட்டணக் கொடுப்பனவு | 200,000.00 |

## பயண முன்னறிவித்தல்

நீங்கள் வெளிநாட்டில் இருக்கும்போது உங்கள் பற்று அட்டைக்கு அதிகபட்ச பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு வசதியாக, தயவுசெய்து உங்கள் வெளிநாட்டுப் பயணத் திட்டங்கள் பற்றி எமக்கு முன்கூட்டியே அறியத்தாருங்கள். நீங்கள் 011 4 4722 00 என்ற எமது வாடிக்கையாளர் சேவைத் தொலைபேசியூடாக அல்லது 011 4 5115 54 என்ற தொலைநகல் இலக்கத்தினூடாக அல்லது personalbanking@hsbc.com.lk என்ற மின்னஞ்சல் மூலம் எமக்கு அறிவிக்கலாம்.

## சர்வதேசப் பாவனை

உங்கள் பிரதான கணக்கின் விபரக்கூற்றில் உள்நாட்டு மற்றும் சர்வதேச பற்று அட்டைக் கொடுக்கல்களின் விபரங்கள் எடுத்துக்காட்டப்படும் என்பதைக் கவனிக்கவும். சர்வதேசக் கொடுக்கல் வாங்கல்களைப் பொறுத்தவரையில், கொடுக்கல் வாங்கல் தொகையானது கொடுக்கல் வாங்கல் நாணயத்திலும் சமமான ரூபாய் நாணயத்திலும் காட்டப்படும்.

## 3. உங்கள் பற்று அட்டையின் பாவனைக்கான பயனுள்ள ஆலோசனைகள்

.

பின்வரும் எளிய வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் மூலம் உங்கள் HSBC பற்று அட்டையின் பாவனையை இனிய அனுபவமாக்கலாம்:

- உங்கள் பற்று அட்டையை உங்கள் பணத்தைப் போலவே பாதுகாப்பாகப் பயன்படுத்துங்கள். அதனை எப்போதும் உங்களுடன் வைத்துக்கொள்ளுங்கள். ஒருபோதும் அதனைக் கவனிப்பு இல்லாத இடத்தில் வைக்காதீர்கள்.
- உங்கள் பற்று அட்டை உங்கள் பிரத்தியேக பாவனைக்கானது. HSBC கிளையிலுள்ள நியமிக்கப்பட்ட வங்கி அலுவலர் தவிர்ந்த வேறு எவருக்கும் அதனைக் கையளிக்காதீர்கள். வங்கி அலுவலரிடம் கையளிக்கும்போதுகூட, அட்டையை காந்தப் பட்டியின் வழியே பல தடவைகள் வெட்டியப பின்பே கையளிக்க வேண்டும்.
- உங்கள் தனிப்பட்ட அடையாள இலக்கத்தை (PIN) வேறு எவருக்கும் தெரிவிக்கவோ அல்லது கையளிக்கவோ கூடாது. இலக்கத்தை ஞாபகப்படுத்திய பின்பு, அதனை அழித்துவிடவும். PIN இலக்கம் எழுதப்பட்ட காகிதத்தை ஒருபோதும் உங்கள் பற்று அட்டையின் அருகில் வைக்க வேண்டாம். இயன்றளவு விரைவாகவும் கிரமமான முறையிலும் (குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடைவ) உங்கள் PIN

இலக்கத்தை உங்கள் விருப்பத்திற்கேற்ப மாற்றிக்கொள்ளுதல் நல்லதென நாம் பரிந்துரைக்கிறோம்.

- PIN அடிப்படையிலான ATM அட்டையைப் போலன்றி, பற்று அட்டை தொலைந்துவிட்டால் அல்லது திருடப்பட்டால் அதனை யாராவது துஷ்பிரயோகம் செய்ய முடியும். நீங்கள் உங்களது பற்று அட்டையைத் தொலைத்துவிட்டால், அதனைத் தடை செய்யவும் பதிலீட்டு அட்டை ஒன்றிற்கு ஏற்பாடு செய்யவும், தயவுசெய்து உடனடியாக வாடிக்கையாளர் சேவை இலக்கத்திற்கு அழைத்து அறிவிக்கவும்.
- உங்கள் பற்று அட்டையை மீள வழங்கும் அல்லது முடிவுறுத்தும் தேவை உங்களுக்கு ஏற்படின், தயவுசெய்து உங்கள் எழுத்துமூல வேண்டுகோளை உங்கள் கணக்கு இருக்கும் HSBC கிளையில் சமர்ப்பியுங்கள். தயவுசெய்து உங்கள் பற்று அட்டையைக் காந்தப் பட்டியின் ஊடாக பல தடவைகள் வெட்டிவிடுங்கள்.
- வணிக நிறுவனங்களில் கொடுக்கல் வாங்கல் செய்யும்போது, பற்று அட்டை உங்கள் முன்னிலையிலேயே பயன்படுத்தப்படுவதை எப்போதும் உறுதிசெய்யுங்கள். ஒருபோதும் பூரணமற்ற விற்பனைச் சீட்டில் கையொப்பமிட வேண்டாம்.
- இலத்திரனியல் விற்பனையிட "Swipe Terminal" இல்லாத வணிக நிறுவனங்களில் உங்கள் பற்று அட்டையைப் பயன்படுத்த முயற்சி செய்ய வேண்டாம்.
- தொலைபேசி/தபால்/இணையத்தளம் அல்லது "அட்டை நேரடியாகச் சமர்ப்பிக்கப்படாத" வேறு முறைகளிலான கொள்வனவுகளுக்கு உங்கள் பற்று அட்டையைப் பயன்படுத்த முயற்சி செய்ய வேண்டாம்.
- உங்கள் தொலைபேசி இலக்கங்களில் அல்லது தபால் முகவரியில் ஏதேனும் மாற்றம் ஏற்படின், தயவுசெய்து உடனடியாக எழுத்து மூலம் HSBCக்கு அறிவிக்கவும்.

**உங்களுக்கு அதியுயர் மட்டத்திலான சேவைகளை வழங்குவதும் உங்களுக்கு அக்கறையுள்ள வங்கி வசதிகள் மற்றும் சேவைகள் பற்றி உங்களுக்குத் தொடர்ச்சியாக அறிவிப்பதுமே HSBC யின் நோக்கமாகும். உங்களுக்கு ஏதேனும் உதவி தேவைப்படின், தயது செய்து எமது வாடிக்கையாளர் சேவை துரித அழைப்பு இலக்கத்தினூடாகத் தொடர்புகொள்ளுங்கள். அல்லது உங்கள் கிளை முகாமையாளருக்கு எழுதுங்கள்.**

# 4. டெபிற் கார்ட் விதிகள் மற்றும் நிபந்தனைகள்

தனிநபர்களினால் வைத்திருக்கப்படும் சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்குகளின் பேரில் வழங்கப்பட்ட டெபிற் கார்ட்டின் பயன்பாட்டுக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள், இந்த ஆவணத்தில் குறித்துரைக்கப்படுகின்றவாறும் காலத்திற்குக் காலம் வங்கியினால் திருத்தப்பட்டவாறாகவும் இருக்கும். கணக்கு வைத்திருப்பவர் கார்ட் விண்ணப்பப் படிவத்தில் கையொப்பமிடுவதன் மூலம், அல்லது கார்ட் பெறப்பட்டதை எழுத்தில் ஏற்றுக்கொள்வதன் மூலம், அல்லது கார்ட்டின் பிற்புறத்தில் கையொப்பமிடுவதன் மூலம், அல்லது கார்ட்டைப் பயன்படுத்திக் கொடுக்கல் வாங்கலொன்றைச் செய்துகொள்வதன் மூலம் அல்லது பதிவேட்டிலுள்ள முகவரிக்கு கார்ட் அனுப்பப்பட்டதிலிருந்து பத்து நாட்களின் பின்னர் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உடன்பட்டு, அவற்றை ஏற்றுக்கொள்கிறார் எனக் கருதப்படுதல் வேண்டும். கணக்கு வைத்திருப்பவர் வங்கியுடனான அவரது நடைமுறை/சேமிப்புக் கணக்குகளின் செயற்பாட்டு விதிகள் மற்றும் நிபந்தனைகளினாலும் தொடர்ந்து பிணிக்கப்பட்டவராக இருப்பார்.

## வரைவிலக்கணங்கள்

1) "**HSBC**" என்பது, ஹொங்கொங் SARரிலும் அதன் சட்டங்களின் கீழும் உரியமுறையில் கூட்டிணைக்கப்பட்ட வங்கித்தொழிற் கூட்டுத்தாபனமொன்றாகவுள்ளதும், ஹொங்கொங், மத்திய குவீன்ஸ் வீதியில் 1ஆம் இலக்கத்தில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில், கொழும்பு 1, சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தையிலுள்ள 24ஆம் இலக்கத்திலும் வேறிடங்களிலும் உள்ள அதன் கிளையலுவலகங்களில் சொல்லப்பட்ட குடியரசில் தொழில்கொண்டுநடாத்துகின்றதுமான வரையறுக்கப்பட்ட ஹொங்கொங் அன்ட் ஷங்காய் வங்கித்தொழிற் கூட்டுத்தாபனம் என்று பொருளாகும். "HSBC" அல்லது "வங்கி"; அத்துடன் அதன் அடுத்துறுபவர்களையும் சாட்டுதற்காரர்களையும் உள்ளடக்கும்.

2) **"பற்று அட்டை" (Debit Card)** என்பது, தோதானவாறு, அட்டை வைத்திருப்பவரொருவருக்கு HSBCயினால் வழங்கப்பட்ட உள்நாட்டில்/சர்வதேச ரீதியில் செல்லுபடியான பற்று அட்டை என்று பொருளாகும்.

3) **“அட்டை வைத்திருப்பவர்”** என்பது, HSBCயுடன் வைத்திருக்கப்பட்ட கணக்கொன்றன்மீது HSBCயினால் பற்று அட்டை வழங்கப்பட்ட ஆளொருவரைக் குறிப்பீடு செய்யும். அட்டை வைத்திருப்பவர் ஒன்றில் தனிக் கணக்குவைத்திருப்பவராக அல்லது கூட்டுக்கணக்குகளின் விடயத்தில், தனிக் கையொப்பமிடுநராக அல்லது தனியாகச் செயலாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

4) **“கணக்கு வைப்பாளர்(கள்)”** (‘நீங்கள்’, ‘உங்கள்’, ‘உங்களது’’ என்றும் குறிப்பிடப்படும்) என்பது HSBCஇல் ஆரம்பிக்கப்பட்டுப் பேணப்படும் முதலாவது கணக்கின் விண்ணப்பப் படிவத்தில் பெயரிடப்பட்டுள்ள கணக்கு வைப்பாளரை (வைப்பாளர்களை) குறிக்கும்.

5) **“கணக்குகள்”** என்பது டெபிற் கார்ட்டின் செயற்பாட்டிற்குச் செல்லுபடியானவை என்று HSBCனால் குறித்துரைக்கப்பட்டு, தனிநபர்கள் வைத்திருக்கும் சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்குகளைக் குறிக்கும்.

6) ‘‘**ஏறிஎம்**’’ **(ATM)** என்பது தன்னியக்க டெலர் இயந்திரங்களைக் குறிக்கும். இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் தன்னியக்க டெலர் இயந்திரங்கள் பற்றி குறிப்பிடப்படும்போது, கார்ட்டின் பாவனை மூலம் செயற்படுத்தப்படும் வலையமைப்பின் ஒரு பகுதியாக (கார்ட் வழங்கப்பட்ட நாட்டில் அல்லது அதற்கு வெளியே) பயன்படுத்தப்படும் அது போன்ற வேறு இயந்திரங்களும் ‘‘ATM’’ என்ற பதத்தில் உள்ளடங்கும்.

7) **“விபரக்கூற்று”** என்பது குறிப்பிட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் (டெபிற் கார்ட் கொடுக்கல் வாங்கல்களும் உள்ளடங்கும்) மற்றும் கணக்கு மீதி ஆகிய விபரங்களை எடுத்துக்காட்டும் வகையில் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் HSBCனால் கணக்கு வைத்திருப்பவருக்கு அனுப்பப்படும் கணக்கு விபர அறிக்கையாகும். HSBC பொருத்தமெனக் கருதும் வேறேதும் விபரங்களும் இதில் உள்ளடக்கப்படலாம்.

8) **“கொடுக்கல் வாங்கல்கள்”** என்பது கணக்கு வைத்திருப்பவர் தனது டெபிற் கார்ட்டை பயன்படுத்தி, கணக்குத் தொடர்பில் அனுமதிக்கத்தக்க நடவடிக்கைகளைச் செயற்படுத்தும்படி HSBCக்கு நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் வழங்கும் ஏதேனும் அனுமதிக்கத்தக்க அறிவுறுத்தலைக் குறிக்கும் (உதா: பண

மீளப்பெறுகைகள், விற்பனை ஸ்தானத்திலான கொடுப்பனவுகள், பண/காசோலை வைப்புக்கள் முதலியன).

9) **"வணிக நிறுவனங்கள்"** என்பது எங்கிருந்தாலும் டெபிற் கார்ட்டை ஏற்றுக்கொள்ளும் நிறுவனங்களைக் குறிக்கும். HSBCளால் அல்லது VISA இன்டர்நஷனலினால் விளம்பரப்படுத்தப்படும் விற்பனை நிலையங்கள், கடைகள், உணவகங்கள், விமான சேவை நிறுவனங்கள் முதலியனவும் உள்ளடங்கும்.

10) **"பிரதான கணக்கு"** என்பது டெபிற் கார்ட்டுடன் இணைக்கப்பட்ட பல்தொகுதிக் கணக்குகளைப் பொறுத்தவரையில், செயற்பாட்டிற்கென பிரதான/முதலாவது கணக்காக நியமிக்கப்பட்ட கணக்கைக் குறிக்கும். அதாவது, இக் கணக்கிலேயே டெபிற் கார்ட் தொடர்பான கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள், விதிப்பனவுகள், மற்றும் கட்டணங்கள் பற்று வைக்கப்படும்.

11) **"சர்வதேசக் கொடுக்கல் வாங்கல்கள்"** என்பது இலங்கைக்கு வெளியே HSBCனூடாக கார்ட் வைத்திருப்பவர் மேற்கொள்ளும் சகல கொடுக்கல் வாங்கல்களையும் குறிக்கும்.

12) **"விசா"** (VISA) என்பது வீசா இன்டர்நஷனலுக்குச் சொந்தமான அடையாளத்தைக் குறிக்கும்.

13) **"விசா ஏடிஎம் வலையமைப்பு"** என்பது டெபிற் கார்ட்டை ஏற்றுக்கொள்ளும் மற்றும் VISA அல்லது இலெக்ட்ரோன் சின்னத்தைப் பார்வைக்கு வைத்திருக்கும் ATMகளின் வலையமைப்பைக் குறிக்கும்.

14) **"நீங்கள்", "உங்களது" "அவர்கள்"** என்னும் பதங்களை அல்லது அவற்றையொத்த குறிப்புப் பெயர்ச் சொற்களைப் பயன்படுத்துதலானது, பொருத்தமான முறையிலும், சந்தர்ப்பம் அவ்வாறு அனுமதிக்கும் பட்சத்திலும் கணக்கு வைத்திருப்பவரை அல்லது கார்ட் வைத்திருப்பவரைக் குறிக்கும். ஆண்பாலிலான எல்லாக் குறிப்பீடுகளும் பெண்பாலையும் உள்ளடக்கும்.

**பற்று அட்டை வழங்கல்**

1) பற்று அட்டை வழங்கலும் அதன் பாவனையும் இலங்கை மத்திய வங்கியின (CBSL) பிரமாணங்களுக்கும் காலத்திற்குக் க்காலம் வலுவிலுள்ள HSBCயின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருக்கும்.

2) பற்று அட்டை மற்றும் தொடர்புடைய தனிப்பட்ட அடையாள இலக்கம் PIN என்பன அட்டை வைத்திருப்பவரின் பெயரில் வழங்கப்படும். சொல்லப்பட்ட அட்டையை அவரின் பாதுகாப்பில் வைத்திருக்கும் பொறுப்பு அட்டையை வைத்திருப்பவரைச் சார்ந்ததாகும்.

3) பற்று அட்டை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் கார்ட் வைத்திருப்பவரினால் அதிகாரமளிக்கப்பட்டவையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அக் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்திற்கும் கார்ட் வைத்திருப்பவதே பொறுப்பாதல் வேண்டும். இலங்கை மத்திய வங்கியின் (CBSL) ஏதேனும் வழிகாட்டு நெறிகள் அல்லது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும்/அல்லது தொழிற்பாட்டு அறிவுறுத்துதல்கள் மற்றும்/அல்லது அவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் (“செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள்”) அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதும் சட்டம், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பன மீறப்பட்டதன் காரணமாக எழுகின்ற ஏதேனும் தண்டனை வழக்கு நடவடிக்கை உட்பட டெபிற் கார்ட்டின் அல்லது அதனுடன் தொடர்புபட்ட PIN இலக்கத்தின் ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத உபயோகத்தினால் விளைந்த நட்டத்துக்காக அல்லது சேதத்துக்காக கார்ட் வைத்திருப்பவர் வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்க வேண்டும். கூட்டுக் கணக்குகளைப் பொறுத்தவரையில், கணக்கு வைத்திருக்கும் அனைவரும் கூட்டாகவும் தனித்தனியாகவும், மேலேயுள்ளவாறு, டெபிற் கார்ட்டை பயன்படுத்துதல், PIN இலக்கத்தின் சேமக்காப்பு மற்றும் டெபிற் கார்ட்டை பயன்படுத்திச் செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்கள் என்பன தொடர்பில் வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்குதல் வேண்டும். அத்தகைய கூட்டுக் கணக்குகளைப் பொறுத்தவரையில், எல்லாக் கணக்கு வைத்திருப்பவர்களும், கார்ட் வைத்திருப்பவருக்குப் பொறுப்பிக்கப்பட்ட எல்லாக் கடமைகளுக்கும் பொறுப்புக்களுக்கும் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்புள்ளவர்களாகவும் ஆளாக வேண்டியுள்ளவர்களாகவும் கருதப்படுதல் வேண்டும்.

4) டெபிட் கார்ட்டை பயன்படுத்திச் செய்யப்பட்ட ஏதேனும் மீளப்பெறுகை, கைமாற்றுகை மற்றும்/அல்லது வேறேதும் கொடுக்கல் வாங்கல்கள் என்பவற்றின் தொகையானது கணக்கில் பற்று வைக்கப்படுதல் வேண்டும். எவையேனும் கொடுக்கல் வாங்கல்களை ஈடுசெய்வதற்காக, கார்ட் வைத்திருப்பவர் தனது கணக்கில் போதிய பணத்தை வைத்திருக்க வேண்டும். கார்ட் வைத்திருப்பவர் தனது வங்கிக் கணக்கிலிருந்து பணத்தை மிகையாகப் பெறுவதற்கு அல்லது வங்கியுடன் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட மேலதிகப்பற்று எல்லை ஏதேனுமிருப்பின் அதற்கு மேலாக தனது கார்ட் மூலம் பணத்தை மீளப்பெறுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

## அட்டை வைத்திருப்பவரின் கடப்பாடுகளும் அட்டையின் செல்லுபடித் தன்மையும்

1) அட்டை கிடைத்தவுடன் அட்டை வைத்திருப்பவர் உடனடியாக அதில் கையொப்பமிட வேண்டும். எவரேனும் ஏனைய ஆள் அட்டையைப் பாவிப்பதற்கு அட்டை வைத்திருப்பவர் அனுமதிக்கக் கூடாது. அட்டை வைத்திருப்பவர் அவரது அட்டையை எந்த நேரமும் தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதன் மூலம் அது துஷ்பிரயோகம் செயயப்படுவதைத் தடுக்க வேண்டும்.

2) பற்று அட்டையைப் பாவிப்பதற்காக அட்டை வைத்திருப்பவருக்கு வழங்கப்படுகின்ற தனிப்பட்ட அடையாள இலக்கம் (PIN) அல்லது தனிப்பட்ட அடையாள இலக்கங்களாகப் பாவிப்பதற்கு அட்டை வைத்திருப்பவரால் தெரிவு செய்யப்பட்ட எவையேனும் இலக்கங்கள் என்பன அட்டை வைத்திருப்பவரின் பாவனைக்கு மட்டுமே என்பதோடு அவை கைமாறத்தகாததும் மிகவும் இரகசியமாகப் பேணப்பட வேண்டியதுமாகும். தனிப்பட்ட அடையாள இலக்கங்கள் PIN வேறு தரப்பினரால் பாவிப்பதற்கு இடமளிக்கக்கூடிய ஏதேனும் வடிவில், இடத்தில் அல்லது முறையில் எழுதி வைக்கப்படக் கூடாது. தனிப்பட்ட அடையாள இலக்கங்களை PIN எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏதேனும் வழியில் வேண்டுமென்றோ அல்லது வேறு வகையிலோ எவரேனும் மூன்றாம் தரப்பினருக்கு வெளிப்படுத்தக் கூடாது.

3) அட்டையானது, அட்டையில் குறிப்பிடப்பட்ட மாதத்தின்/வருடத்தின் இறுதி நாள்வரை செல்லுபடியாகும். அட்டை வைத்திருப்பவர், அட்டை காலாவதியாகும்போது அதனைப் பல துண்டுகளாகக் கிழ்த்து அழிப்பதற்கு பொறுப்பேற்கிறார். அட்டை காலாவதியாகும்போது, HSBC தனது தற்றுணிபின் பேரில் கணக்கு நடத்தையை மதீப்பீடு செய்த பின புதுப்பிக்கப்பட்ட அட்டையை அட்டை வைத்திருப்பவருக்கு

அனுப்பிவைக்கும். பற்று அட்டையை புதுப்பிக்கும் தனி உரிமையை HSBC கொண்டுள்ளது.

## ATM பாவனை

1) பற்று அட்டைகள் HSBC குழும் ATM இயந்திரங்களிலும், வீசா(VISA) ATM வலையமைப்பில் இடம்பெறும் ஏனைய உலகலாவிய வங்கிகளின் ATM களிலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

2) வங்கியானது தனது தற்றுணிபின் பேரில் ATM பணப் பரிமாற்ற வசதியையும் சகல வகையான கொடுக்கல் வாங்கல்களுக்குமுரிய பண மாற்ற வசதியையும் தற்காலிகமாக வாபஸ் அல்லது முடிவுற்த்த முடியும். ATM ஊடாக நாள் ஒன்றிற்கு மேற்கொள்ளக்கூடிய பண மாற்றங்கள் மற்றும் பண மீளப்பெறுகைகளுக்கான உச்சவரம்பை மாற்றுவத்கு வங்கி உரிமை கொண்டுள்ளது.

3) இலங்கை அல்லாத நாடுகளில் HSBC குழுமம்/வீசா (VISA) ATM இயந்திரத்தில் அட்டை வைத்திருப்பவரால் மேற்கொள்ளப்படும் பண மீளப்பெறுகைகள், நடைமுறையிலுள்ள கட்டணத்திட்டத்திற்கு அமைவான ஒரு மீளப்பெறுகைக் கட்டணத்திற்கு உட்படும். இலங்கையிலுள்ள வீசா (VISA) ATM இயந்திரத்தில் மேற்கொள்ளப்படும் பண மீளப் பெறுகைகளும் ஒரு கட்டணம் விதிக்கப்படும். பணம் மீளப்பெறப்படும்போது இது கணக்கில் பற்று வைக்கப்படும்.

4) அட்டைப் பாவனை மூலம் ஏதேனும் ATM இயந்திரத்தில் வைப்பில் இடப்படும் பணம் மற்றும்/அல்லது காசோலைகள் வங்கியால் ஊர்ஜிதம் செய்யப்பட்ட பின்னர் மாத்திரமே வரவு வைக்கப்படும். அது சகல நோக்கங்களுக்கும் இறுதியானதாக இருக்கும். வைப்புச் செய்யும் நேரத்தில் ATM இயந்திரத்தினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டானது, அட்டை வைத்திருப்பவர் வைப்புச் செய்துள்ளார் என்று கூறப்படுவதை மாத்திரமே பிரதிநிதித்துவப்படுத்தும் என்பதோடு அது வங்கியின்மீது பிணைப்பையும் ஏற்படுத்த மாட்டாது. காசோலைகள் சேகரிப்புக்காக மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும் என்பதோடு இந்த காசோலைகள் பணமாக மாற்றப்படும் வரை பண மீளப்பெறுகைகளைப் பெற முடியாது. பணத்தை மீளப்பெறும்போது ATM இயந்திரத்தினால் வெளியிடப்பட்ட எவையேனும் அறிக்கைகள், HSBC இனால் வேறுவகையில் உறுதி செய்யப்படாத பட்சத்தில் முடிவானதாக இருக்கும். அத்தகைய ஏதேனும் உறுதிப்படுத்தல்

இறுதியானதாகவும் முடிவானதாகவும் இருக்கும் என்பதோடு இவ்வாறு உறுதிசெய்யப்பட்ட தொகை அட்டை வைத்திருப்பவரின் மீது பிணிப்புடையதாக இருக்கும்.

5) பற்று அட்டை வழங்கப்பட்ட நாட்டைத் தவிர வேறு ஒரு நாட்டில் கிடைக்கக்கூடிய ATM இயந்திரத்தின் சேவையானது அத்தகைய ஏனைய நாட்டில் வலுவிலுள் ஒழுங்கு விதிகளினால் ஆளுகை செய்யப்படும். இந்த சேவைகள் முன்னறிலித்தல் இன்றி திருப்பிப் பெறப்பட்டால் அதற்கு HSBC பொறுப்புடையதாக மாட்டாது.

## வணிக நிறுவனப் பயன்பாடு

1) பற்று அட்டையானது இலத்திரனியல் பாவனைக்காக மாத்திரமாகும் என்பதோடு விற்பனை ஸ்தானத்தில் இலத்தினியல் மூலமான கொடுக்கல் வாங்கல்களைச் செய்யக்கூடிய நிலையிலுள்ள வணிக நிறுவனங்களில் மாத்திரமே அது ஏற்றுக்கொள்ளப்படும். அத்கைய இலத்திரனியல் கொடுக்கல் வாங்கலுக்கான வசதியற்ற வணிகத் நிறுவனங்களில் கொள்வனவுகளுக்காக அட்டையைப் பயன்படுத்துதல் அனுமதியற்ற செயலாகக் கருதப்படும். இத்தகைய கொடுக்கல் வாங்கல்களுக்கு அட்டை வைத்திருப்பவரே பொறுப்பாளியாவார்.

2) வழங்கப்பட்ட அட்டையானது, பாதுகாப்பு நோக்கத்திற்காக, வணிக நிறுவனங்களில் உடனடியாகப் பயன்படுத்த முடியாததாக இருக்கும். எனவே, வணிக நிறுவனங்களில் கொடுக்கல் வாங்கல்களைச் செய்யக்கூடியதாக அட்டையைச் செயற்படுத்துவதற்கு, அட்டை வைத்திருப்பவர் HSBCஇன் வாடிக்கையாளர் சேவை நேரடி தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தி அட்யைச் செயற்படுத்திக்கொள்ள வேண்டும்.

3) வணிக நிறுவனங்களிவ் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அட்டையைப் பாவிக்கும்போது அட்டையை வைத்திருப்பவர் விற்பனைச் சீட்டில் கையொப்பமிட்டு அவரின் பிரதியை தம்முடன் வைத்துக்கொள்ள வேண்டும். மேலதிக கட்டணம் செலுத்தி, விற்பனைச் சீட்டின் பிரதிகளை HSBC இடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அட்டை இலக்கம் குறிப்பிடப்பட்டு அட்டை வைத்திருப்பவரின் கையொப்பத்தைக் கொண்ட ஒரு விற்பனைச் சீட்டானது, அட்டை வைத்திருப்பவரினால் உறப்பட்ட பொறுப்பின் அளவு தொடர்பில் HSBCக்கும் அட்டை வைத்திருப்பவருக்கும் இடையிலான உடன்பாட்டிற்கு முடிவான சான்றாக இருக்கும். அட்டை வைத்திருப்பவர் தான் பெற்ற

பொருட்கள் மற்றும் சேவைகள் குறித்துத் திருப்தி அடைந்துள்ளாரா என்பதை உறுதிசெய்யும் அவசியம் எதுவும் HSBCக்கு கிடையாது. ஏதேனுமொரு விற்பனைச் சீட்டு அட்டை வைத்திருப்பவரால் தனிப்பட்ட முறையில் கையொப்பமிடப்படாதபோதிலும், அது உண்மையிலேயே அவரால் அங்கீகரிக்கப்பட்டது என்று நிரூபிக்கப்படுமானால், அதற்கான பொறுப்பை அட்டை வைத்திருப்பவரே ஏற்க வேண்டும்.

4) இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற பற்று அட்டையானது வீசா (VISA) மின்னணு சின்னத்தைக் காட்சிப்படுத்தும் பொருட்கள் மற்றும் சேவைகளின் வழங்கல்கள் (ஆனால் அவற்றுக்கு மாத்திரம் மட்டுபடுத்தப்படாதவை) தொடர்பில் அட்டை வைத்திருப்பவருடன் வணிக நிறுவனம் மேற்கொள்ளக்கூடிய எவையேனும் கொடுக்கல் வாங்கல்களுக்கான ஏதேனும் பொறுப்பினை HSBC ஏற்றுக்கொள்ளமாட்டாது. அட்டை வைத்திருப்பவருக்கு விலைக்கழிவுகளாக வழங்கப்படும் அத்தகைய சலுகைகள் தொடர்பில் மூன்றாம் தரப்பினரால் வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தை HSBC பிரதிநிதித்துவம் செய்வதில்லை. வழங்கப்படுகின்ற பொருள் அல்லது சேவையானது ஏதேனும் வழியில் குறைபாடு உடையதாக அல்லது வேறு வகையில் திருப்தி அற்றதாக இருப்பின் HSBC அதற்கு பொறுப்பாகமாட்டாது. ஏதேனும் வணிக நிறுவனம் தொடர்பில் அட்டை வைத்திருப்பவருக்கு ஏதேனும் முறைப்பாடு இருந்தால் அவர் அதனை அந்த வணிக நிறுவனத்துடன் தீர்த்துக் கொள்ள வேண்டும். அட்டை வைத்திருப்பவர் அவ்வாறு செய்யத் தவறினால், HSBC உடனான எவையேனும் கடப்பாடுகளிலிருந்து விடுவிக்கப்படமாட்டார். எனினும், சாத்தியமான சந்தர்ப்பத்தில் அட்டை வைத்திருப்பவருக்கு HSBC அதன் முயற்சியால் உதவி செய்யலாம். இந்த உதவியைப் பெறுவதற்காக, அட்டை வைத்திருப்பவர் ஏதேனும் சான்று ஆவணங்களுடன HSBCக்கு உடனடியாக முறைப்பாடு செய்ய வேண்டும்.

5) வருமதிகளைச் சேகரிப்பது தொடர்பாக அல்லது பிணக்கு ஒன்றைத் தீர்ப்பது தொடர்பாக ஏற்படும் கிரயங்கள், சட்ட செலவுகள் (எவரேனும் முகவருக்கு விடயத்தைப் பாரப்படுத்தும் அவசியம் ஏற்பட்டால்) அல்லது சட்ட வளங்கள் போன்றவற்றிற்கு அட்டை வைத்திருப்பவரே பொறுப்பாளியாவார்.

6) பற்று அட்டையை ஏற்றுக்கொள்வதற்கு ஏதேனும் வணிக நிறுவனம் மறுக்குமாயின், அதற்கான பொறுப்பை HSBC ஏற்காது.

7) ஏதேனும் வணிக நிறுவனத்தினால் மேலதிகமாக அறவிடப்பட்டு, கொடுக்கல் வாங்கல் தொகையுடன் கணக்கில் பற்று வைக்கப்பட்ட ஏதேனும் மிகை விதிப்புக்கு HSBC பொறுப்பாகமாட்டாது.

8) ஒரு கொள்வனவுக் கொடுக்கல் வாங்கலும் பொருட்கள்/சேவைகளை இரத்துச்செய்வதால் ஏற்படும் வரவுக் கொடுக்கல் வாங்கலும் இரண்டும் வெவ்வேறான பரிமாற்றங்களாகும். இரத்துச்செய்கை இடம்பெறும்போது, வணிக நிறுவனத்திடமிருந்து பணம் கிடைத்த பின்பே அப் பணம் (அதற்கான கட்டணத்தைக் கழித்துக்கொண்டு) கணக்கில் மீள வரவு வைக்கப்படும். பணம் திருப்பிக் கிடைத்த தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் கணக்குக்கு பணம் அனுப்பப்படாவிட்டால், அட்டை வைத்திருப்பவர் வணிக நிறுவனத்திடம் வழங்கிய வரவுக் குறிப்பின் பிரதியொன்றுடன் HSBCக்கு அது பற்றி அறிவிக்க வேண்டும்.

9) பற்று அட்டை பல கணக்குகளுடன் இணைக்கப்பட்டிருந்தால், வணிக நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல்கள் பிரதான கணக்கில் பற்று வைப்பதன் மூலம் செயல்படுத்தப்படும். அத்தகைய கொடுக்கல் வாங்கல்களைச் செயற்படுத்துவதற்கு போதிய பணம் இந்தக் கணக்கில் இல்லாத சந்தர்ப்பத்தில், பற்று அட்டையுடன் இணைக்கப்பட்டுள்ள ஏனைய கணக்குகளில் ஒட்டுமொத்தமாக அல்லது தனித்தனியாக தேவையான பணம் இருந்தாலும் HSBC அக் கொடுக்கல் வாங்கல்களை ஏற்றுக்கொள்ளாது.

## சர்வதேசப் பாவனை

1) பற்று அட்டையின் பாவனையானது சகல சந்தர்ப்பங்களிலும் நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்களுக்கு அமைவானதாக இருக்க வேண்டும். அவ்வாறு இணங்கியொழுகுதலில் ஏதேனும் தவறுகை ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில், நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைக்கு கணக்கு வைத்திருப்பவர்(கள்) கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பேற்க வேண்டும். HSBC வழங்கிய பற்று அட்டையை வைத்திருப்பதிலிருந்து அவர்கள் HSBC இனால் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) தடை செய்யப்படலாம். நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டு பிரமாணங்களுக்கு இணங்கியொழுகாமையினால் எழுகின்ற ஏதனும்/அனைத்து விளைவுகளுக்கும் எதிராக கணக்கு வைத்திருப்பவர்கள் கூட்டாகவும்

தனித்தனியாகவும் HSBCக்கு இழப்பெதிர்காப்பு அளிப்பதுடன், அத்தகைய இடர்களிலிருந்து HSBCக்கு தீங்கு வராமல் பாதுகாக்கவும் வேண்டும்.

2) பந்தி (1) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எழுத்து மூலம் இழப்பு அறிவிக்கப்பட்ட பின்னர் இழப்பு ஒன்றினால் பற்று அட்டை மீது ஏற்பட்ட விளைவுக்கு வணிக நிறுவனங்களுடனான் கொடுக்கல் வாங்கல் தொடர்பான பொறுப்புக்களானது பூச்சியமாக இருக்கும் (இதனகத்துப் பின்னர் அது "பூச்சிய இழப்பு அட்டைப் பொறுப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) எனினும் ATM இயந்திரத்தினூடாக செய்யப்படுகின்ற பணப் மீளப்பெறுகைகளைப் பொறுத்தவரையில், அட்டை வைத்திருப்பவர் தனிப்பட்ட இரகசிய அடையாள இலக்கங்களைப் (PIN) பயன்படுத்த வேண்டுமென்பதால், அத்தகைய கொடுக்கல் வாங்கல்களுக்கு "பூச்சிய இழப்பு அட்டைப் பொறுப்பு" ஏற்புடையதாகாது.

3) அட்டையின் இழப்பு அல்லது களவு போன்ற சந்தர்ப்பத்தில் அல்லது (1) ஆம் பந்திக்கேற்ப HSBCக்கு அறிவிக்கப்படாத சந்தர்ப்பத்தில் (அல்லது (1) ஆம் பந்திக்கேற்ப் தகவல் கொடுப்பதற்கு முன்னர் இடம்பெற்ற) துஷ்பிரயோகத்தினால் எழக்கூடிய ஏதேனும் இழப்பு, கிரயம், செலவினங்கள் என்பவற்றுக்கு எதிராக பூரண இழப்பெதிர்காப்பை அட்டை வைத்திருப்பவர் இத்தால் HSBCக்கு வழங்குகின்றார்.

4) ஆயினும், அட்டை வைத்திருப்பவர் சகல விதிகளுக்கும் இணங்கியொழும் பட்சத்தில், HSBC ஆனது தனது தனித் தற்றுணிபின் பேரில் பொருத்தமான ஒரு கட்டணத்திற்கு மாற்றீட்டு அட்டை ஒன்றை வழங்கலாம். மாற்றீட்டு அட்டையை வழங்கும்போது அது தொடர்பான ஏதேனும் செலவு பிரதான கணக்கில் பற்று வைக்கப்படும்.

5) அட்டை வைத்திருப்பவர் இழந்த அட்டையை மீளக் கண்டெடுத்தாலும் அதனைப் பாவிக்கக் கூடாது. அந்த அட்டையை காந்தப் பகுதியினூடாக பல துண்டுகளாக வெட்டி அழித்துவிட வேண்டும்.

## விபரக்கூற்றுக்களும் பதிவேடுகளும்

1) டெபிற் கார்ட் கொடுக்கல் வாங்கல்களின் பதிவுகள், HSBCஇனால் அனுப்பப்படும் விபரக்கூற்றில் காணப்படும். கணக்கிற்குப் பொருத்தமான விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி பதிவேட்டிலுள்ள தபால் முகவரிக்கு அத்தகைய கூற்றுக்கள் காலாகால அடிப்படையில் கணக்கு வைத்திருப்பவருக்கு தபாலில் அனுப்பப்பட வேண்டும். டெபிற் கார்ட்டை பயன்படுத்திச் செயற்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் HSBC வைத்திருக்கும் பதிவேடே எல்லா நோக்கங்களுக்கும் முடிவானதாகவும் பிணிப்பதாகவும் இருக்கும்.

2) ஒவ்வொரு விபரக்கூற்றும் பெறப்பட்டதும் உடனடியாக அல்லது கார்ட் வைத்திருப்பவர் அக்கூற்றை எத்திகதியில் பெற்றாரெனக் கருதப்படுகின்றதோ அத்தேதியிருந்து 20 (இருபது) கலண்டர் நாட்களுக்குக் குறையாத (“30 நாள் மீளாய்வு”) காலப்பகுதிக்குள், விபரக்கூற்றில் காணப்படுகின்ற ஒவ்வொரு பதிவையும் பரிசோதனை செய்து சரிபார்ப்பதற்கும், தனது சொந்தப் பதிவுகளோடு அவற்றை ஒப்பீடு செய்வதற்கும், எவையேனும் பிழைகள், விடுபடுகைகள் மற்றும் ஒழுங்கீனங்கள் இருந்தால், அல்லது எவையேனும் மோசடியான அல்லது அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள் பதியப்பட்டிருந்தால் அல்லது வேறேதும் ஆட்சேபனைகள் இருந்தால் (கூட்டாக, “கணக்கு ஒழுங்கீனங்கள்” எனப்படும்) அவற்றை எழுத்து மூலம் உடனடியாக வங்கிக்கு அறிவிப்பதற்கும் கார்ட் வைத்திருப்பவர் உடன்படுகின்றார். 30 (முப்பது) நாள் மீளாய்வுக் காலத்தினுள் கார்ட் வைத்திருப்பவர் வங்கிக்கு அறிவிக்கத் தவறுவாராயின், விபரக்கூற்றில் காட்டப்பட்ட மீதியும் கணக்கு ஒழுங்கீனங்கள் உட்பட்ட சகல பதிவுகளும் சரியானவை, பூரணமானவை, அதிகாரமளிக்கப்பட்டவை, கார்ட் வைத்திருப்பவரைப் பிணிப்பவை என்று கருதப்படும். கார்ட் வைத்திருப்பவர் இப் பிரிவிற்கிணங்க அறிவித்தல் கொடுத்த கொடுக்கல வாங்கல்களைத் தவிர, மிகச் சமீபத்திய விபரக்கூற்றுத் திகதி வரை இடம்பெற்ற ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் வங்கி எல்லாப் பொறுப்பிலிருந்தும் விடுவிக்கப்படும்.

3) தற்போதுள்ள நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்களின்படி, ரூபாய் கணக்குகளுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்காக வதியாதவர் ஒருவருக்கு சர்வதேச ரீதியாக வலுவுள்ள பற்று அட்டை ஒன்றை வழங்க முடியாது.

4) சட்டத்தினால், அரசாங்க ஒழுங்குவிதிகளினால் அல்லது இலங்கை மத்திய வங்கி வெளியிடும் பிரமாணங்களினால் தேவைப்படுத்தப்படுமானால், இந்த விதிகள் தன்னியல்பாகவே திருத்தப்படும்.

**கட்டணங்கள்**

1) நடைமுறையிலுள்ள கட்டணத் திட்டத்திற்கேற்ப, அட்டையின் விநியோகம்/புதுப்பித்தல் தொடர்பில் பற்று அட்டைக்கான வருடாந்தக் கட்டணங்கள் பிரதான கணக்கில் பற்று வைக்கப்படும். இந்தக் கட்டணங்கள் மீளளிக்கப்பட மாட்டாது.

2) பற்று அட்டை தொடர்பான ஏனைய கட்டணங்களும், நடைமுறையிலுள்ள கட்டணத் திட்டத்திற்கேற்ப, காலத்துக்குக் காலம் பிரதான கணக்குக்கில் பற்று வைக்கப்படும்.

3) வங்கி அதன் தற்றுணிபின் பேரிலும், கார்ட் வைத்திருப்பவருக்கு முன்னறிவித்தல் கொடுக்காமலும், உரிய இறுப்பனவுப் பட்டியலைக் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்வதற்கு உரிமை கொண்டுள்ளது. கார்ட் வைத்திருப்பவா் வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில் வங்கியின் இறுப்பனவு ப்பட்டியல் பற்றிய கைந்நூல் அவருக்கு வழங்கப்படும்.

4) வெளிநாட்டு நாணயத்திலான சகல கட்டணங்களும் இலங்கை ரூபாயில் பிரதான கணக்கில் பற்று வைக்கப்படும். வெளிநாட்டு நாணயத்தில் ஏற்பட்ட செலவை, HSBC இனால் அல்லது வீசாவினால் (VISA) காலத்துக்குக் காலம் குறித்துரைக்கப்படும் நாணய மாற்று வீதத்தில் மாற்றிப் பற்று வைக்கும் உரிமையை அட்டை வைத்திருப்பவர் இத்தால் HSBCக்கும் வீசாவுக்கும் (VISA) வழங்குகின்றார்.

5) இலங்கை ஜனநாயக குடியரசில் காணப்படும் எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் இவ் அட்டையை பயன்படுத்திப் பெற்றுக்கொள்ளும் பெற்றோல், டீசல், எரிவாயு, மற்றும் ஏணைய சேவைகளுகென வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட கையாளுகை கட்டணமொன்று அறவிடப்படும். இக்கட்டணமானது வழங்கப்படும் விற்பனை சீட்டிலிருந்து மாறுபடலாம்.

## தகவல்களை வெளிப்படுத்தல்

1) கார்ட்டை வழங்குதல், அதனைப் பேணுதல், கார்ட்டை பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல்களை நிறைவேற்றுதல், கார்ட்டை புதுப்பித்தல் அல்லது கார்ட்டுடன் தொடர்புபட்ட வேறேதேனும் நோக்கம் என்பவற்றுக்காக HSBC அவசியமெனக் கருதுகின்ற எவையேனும் விடயங்கள் தொடர்பாக ஏதேனும் தகவலை, பதிவேடுகளை அல்லது சான்றிதழ்களை வழங்கும்படி HSBC வேண்டுகோள் விடுக்கும்போது, கார்ட் வைத்திருப்பவர் அவற்றை வழங்குதல் வேண்டும். கொடுக்கப்பட்ட தகவல்களை எத்தகைய வழிவகைகள் ̇மூலமும், அவசியமெனக் கருதப்படுகின்ற எத்தகைய மூலவிடங்களிலிருந்தும் விசாரித்து ஊர்ஜிதம்செய்ய கார்ட் வைத்திருப்பவர் HSBC க்கு அதிகாரமளிக்கின்றார். கார்ட் வைத்திருப்பவா் அத்தகைய தகவல்களை/தரவுகளை வழங்காவிடின் அல்லது பிழையான தகவல்களை/தரவுகளை வழங்கினால், HSBC, அதன் தற்றுணிபின்படி, டெபிற் கார்ட்டை புதுப்பிக்க மறுக்கலாம் அல்லது அதனை உடனடியாக முடிவுறுத்தலாம்.

2) கார்ட் வைத்திருப்பவா் பற்றிய தகவல்களை தகுதிவாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட ஏதேனும் நீதிமன்றத்திற்கும் மருவிய நீதித்துறை அதிகாரிகளுக்கும் சட்ட அமுலாக்க முகவரகங்களுக்கும் அரசாங்கத்தின் வேறேதேனும் பிரிவுக்கும் வெளியிட HSBC உரிமை கொண்டுள்ளது.

3) ஏதேனும் இலத்திரனியல் பணப் பரிமாற்ற வலையமைப்பில் பங்குபற்றுதல் சம்பந்தமாக அவசியப்படும் அல்லது தோதாகவிருக்கக்கூடிய, அல்லது டெபிற் கார்ட்டின் பயன்பாட்டிலிருந்து அல்லது தொழிற்பாட்டிலிருந்து அல்லது அது சம்பந்தமாக எழுகின்ற எவையேனும் கடப்பாடுகளைப் புரிவதற்கு அவசியமென வங்கி கருதக்கூடிய கணக்குத் தொடர்பான தகவல்களை, கண்டிப்பான இரகசியத்தன்மையுடன் வேறு நிறுவனங்களுக்கு வெளியிட HSBC உரிமை கொண்டுள்ளது.

4) அலுவலக நடைமுறைகளுக்காகவும் வெளியிலிருந்து பெறப்படுகின்ற ஏனைய சேவைகளுக்காகவும் HSBC தனது தனித்தற்றுணிபின் பேரில் ஏதேனும் மூன்றாம் தரப்பு முகவா்களுக்கு ஏதேனும் செயற்பாடுகளை ஒப்புக்கொடுக்கவும் அத்தகைய மூன்றாம் தரப்பினருக்கு கணக்கின் விபரங்களை வழங்கவும் முடியும். இது தொடர்பில் HSBC குழுமத்துடன் அல்லது ஏதேனும் நிறுவனத்துடன் அல்லது முகவருடன் அல்லது வங்கியினால் உபயோகிக்கப்படுகின்ற மூன்றாம் தரப்பினருடன் கணக்கு

வைத்திருப்பவரின் (வைத்திருப்பவர்களின்), கணக்கின் மற்றும்/அல்லது கொடுக்கல் வாங்கல்களின் தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கு, களஞ்சியப்படுத்துவதற்கு அல்லது அனுப்புவதற்கு தேவை ஏற்படுகிறது என்பதைக் கணக்கு வைத்திருப்பவர் புரிந்துகொள்வதுடன் அதற்கான அதிகாரத்தையும் வங்கிக்கு வழங்குகிறார். ஏதேனும் அத்தகைய நடைமுறை, தகவல்களின் பகிர்வு, களஞ்சியப்படுத்தல் அல்லது தகவல் அனுப்பீட்டை இரகசியமான முறையில் மேற்கொள்ள வங்கி பொறுப்பேற்றுக் கொள்கின்றது. பின்வரும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய நிலைமைகளில் வங்கியானது HSBC குழுமத்திற்குள் அத்தகைய தகவல்களின் கண்டிப்பான இரகசியத் தன்மையைப் பேணுவதற்கு முயற்சி செய்யும்: (a) ஏதேனும் பொருத்தமான சட்டம், பிரமாணம் அல்லது ஏதேனும் அரசாங்க அல்லது ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் வேண்டுகோள் வேறு விதமாகத் தேவைப்படுத்தினால் அல்லது அனுமதித்தால் அல்லது (b) மோசடிகளைத் தடுக்கும் நோக்கத்திற்கு வெளிப்படுத்தல் அவசியமாக இருந்தால் அல்லது (c) டெபிற் கார்ட் வசதியை வழங்குவதற்கு வெளிப்படுத்துகை அவசியமென வங்கி கருதினால். கணக்கு வைத்திருப்பவர் (வைத்திருப்பவர்கள்) பொருத்தமான சகல தரவுப் பாதுகாப்புச் சட்டங்களுக்கும் பணிந்தொழுக வேண்டும். அனுப்பப்படும், செயற்படுத்தப்படும் அல்லது வேறு விதத்தில் கையாளப்படும் தனிப்பட்ட அல்லது வேறு தரவுகளுக்கு உரிய அனைவரும் இந்த விதிகளின் கீழும் இந்தச் சட்டங்களுக்கு அமைவாகவும் அத்தகைய அனுப்பீடு, செயற்படுத்தல் அல்லது வேறு விதத்திலான கையாளுகைக்குச் சம்மதம் அளித்திருப்பதை அல்லது அத்தகைய அனுப்பீடு, செயற்படுத்தல் அல்லது வேறு விதத்திலான கையாளுகை மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் சம்மதம் அளிப்பதை கணக்கு வைத்திருப்பவர் (வைத்திருப்பவர்கள்) உறுதிப்படுத்த வேண்டும். இந்த ஏற்பாட்டின் ஏதேனும் மீறுதலின் விளைவாக ஏற்படக்கூடிய ஏதேனும் கிரயங்கள், தெண்டங்கள், சேதங்கள் மற்றும் ஏனைய இழப்புக்களுக்கு எதிராக வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்கவும் வங்கியைத் தீங்கிலிருந்து பாதுகாக்கவும் கணக்கு வைத்திருப்பவர் (வைத்திருப்பவர்கள்) இணங்குகின்றார்/இணங்குகின்றனர்.

5) பற்று அட்டைப் பாவனை மூலம் மேற்கொள்ளப்படும் ஏதேனும் வெளிநாட்டு நாணயப் மீளப்பெறுகைகள்/கொடுப்பனவுகள் பற்றி இலங்கை மத்திய வங்கிக்கு (CBSL) அறிக்கையிடும் உரிமையை.

## தொலைந்த அல்லது திருடப்பட்ட பற்று அட்டை

1) கார்ட் காணாமற்போனமை அல்லது திருடப்பட்டமை, அத்தகைய காணாமற்போனமை/திருடப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டவுடனே தொலைபேசி, தொலைநகல் அல்லது ரெலெக்ஸ் மூலம் வங்கியின் கார்ட் நிலையத்திற்கும் எழுத்தில் பொலிசாருக்கும் (அல்லது, வெளிநாட்டிலிருப்பின், VISA அல்லது MasterCard அங்கத்தவர் ஒருவருக்கும்) அறிவிக்கப்பட வேண்டும். அதே சமயத்தில, அத்தகைய ஏதேனும் தொலைபேசி, தொலைநகல் அல்லது ரெலெக்ஸ் செய்தியானது, கார்ட் வைத்திருப்பவரின் அல்லது உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட அவரது அட்டோர்னித் தத்துவக்காரரின் கைப்பட்ட கையொப்பத்தின் மூலம் உடனடியாக எழுத்தில் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். கார்ட் காணாமற்போனமை அல்லது திருடப்பட்டமை அறிவிக்கப்பட்டு, பின்னர் மேற்கூறப்பட்டவாறு வங்கிக்கு அல்லது VISA அல்லது MasterCard உறுப்பினருக்கு எழுத்தில் உறுதிப்படுத்தப்படும்வரை, கார்ட்டின் அனுமதியற்ற பயன்பாட்டின் விளைவாக கார்ட் கணக்கில் பற்று வைக்கப்பட்ட எல்லாத் தொகைகளுக்கும், கார்ட் கணக்கில் இனிமேல் பற்று வைக்கப்படவுள்ள முடிவுறாதுள்ள கார்ட் கொடுக்கல் வாங்கல்களுக்கும், கார்ட் வைத்திருப்பவர் பொறுப்பேற்க வேண்டும். கார்ட் வைத்திருப்பவர் காணாமற்போன அல்லது திருடப்பட்ட அட்டையை/அட்டைகளை மீட்டெடுக்கும் பட்சத்தில், மீட்டெடுக்கப்பட்ட அட்டையை/அட்டைகளை உடனடியாக வங்கிக்குத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

2) மேலேயுள்ள இப் பிரிவின் (1) வாசகத்துக்கிணங்க, கார்ட் காணாமற்போனமை எழுத்தில் அறிவிக்கப்பட்ட பின்னர், காணாமற்போன ஒரு டெபிற் கார்ட்டின் பேரில் வணிகத் தாபனங்களில் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் பொறுப்பு பூச்சியமாகவிருக்கும்; ஆயினும், காணாமற்போன டெபிற் கார்ட்டை சேமக்காப்பாக வைத்திருப்பதற்கு நியாயமான கவனமும் முயற்சியும் எடுக்கப்பட்டதென்றும் காணாமற்போனமை/திருடப்பட்டமை உடனடியாக அறிவிக்கப்பட்டதென்றும் கார்ட் வைத்திருப்பவர் நல்லெண்ணத்துடன் செயலாற்றினாரென்றும் நிரூபிக்கப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும் (இச் சிறப்புக்கூறு இதனகத்துப் பின்னர் ‘பூச்சிய காணாமற்போன கார்ட் பொறுப்பு’ எனக் குறிப்பீடு செய்யப்படும்). எவ்வாறாயினும், ATMகள் மூலமாகச் செய்யப்பட்ட பண மீளப்பெறுகைகளைப் பொறுத்தவரையில், அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள், கார்ட் வைத்திருப்பவருக்கு மட்டுமே தெரிந்த ஒரு PIN இலக்கத்தின்

மூலம் மேற்கொள்ளப்படுவதால், அத்தகைய 'பூச்சிய காணாமற்போன கார்ட் பொறுப்பு' எதுவும் ஏற்புடையதாக இருக்காது. இது கார்ட் வைத்திருப்பவருக்கு இரகசியமான கொடுக்கல் வாங்கலாகக் கொள்ளப்படும்.

3) டெபிற் கார்ட் காணாமற்போய் மேலேயுள்ள இப் பிரிவின் (1) வாசகத்திற்கிணங்க HSBCக்கு அறிவிக்கப்படாத பட்சத்தில், அல்லது மேலேயுள்ள இப் பிரிவின் (1) வாசகத்திற்கிணங்க HSBCக்கு அறிவிக்கப்படுவதற்கு முன்னர் துஷ்பிரயோகம் செய்யப்படும் பட்சத்தில், டெபிற் கார்ட் காணாமற்போனதன் அல்லது துஷ்பிரயோகம் செய்யப்பட்டதன் விளைவாக எழக்கூடிய ஏதேனும் பொறுப்பு (குடியியல் அல்லது குற்றவியல்), நட்டம், கிரயம், செலவுகள் அல்லது சேதங்களுக்கு எதிராக கார்ட் வைத்திருப்பவர் HSBCக்கு முழுமையான இழப்பெதிர்காப்பை இத்தால் வழங்குகின்றார்.

4) கார்ட் வைத்திருப்பவர் பொருத்தமான சகல விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு சகல விதத்திலும் இணங்கியொழுகினால், மாற்றீட்டுப் டெபிற் கார்ட் ஒன்றை, பொருத்தமான கட்டணத்தில் வழங்க HSBC தனது தனித் தற்றுணிபின் பேரில் நவடவடிக்கை எடுக்கலாம். மாற்றீட்டுப் டெபிற் கார்ட்டை வழங்குவதில் உறப்பட்ட ஏதேனும் செலவுத் தொகை கார்ட் வைத்திருப்பவரின் கணக்கில் பற்று வைக்கப்படும்.

5) கார்ட் வைத்திருப்பவர் தனது டெபிற் கார்ட்டை பின்பு மீட்டெடுத்தால், அதனைப் பயன்படுத்தலாகாது. காந்தப் பட்டியினூடாக அதனைப் பல்வேறு துண்டுகளாக வெட்டுவதன மூலம் அதனை அழித்துவிட வேண்டும்.

## முடிவுறுத்துகை

1) HSBC ஆனது எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்நேரத்திலும் டெபிற் கார்ட்டை இரத்துசெய்வதற்கு/திருப்பிப் பெறுவதற்கு அல்லது அல்லது டெபிற் கார்ட்டை அல்லது ஏதேனும் ஏனைய சேவைகளை தனது தற்றுணிபின் பேரில் புதுப்பிப்பதற்கு உரிமை கொண்டுள்ளது.

2) கணக்கு வைத்திருப்பவர் HSBCஇல் வைத்திருக்கும் கணக்கை மூடிவிடுவதற்கு முடிவு செய்யும் பட்சத்தில், அத்தகைய கணக்கின் பேரில் வழங்கப்பட்ட டெபிற் கார்ட் தன்னியல்பாகவே இரத்துச் செய்யப்பட்டுவிடும். கார்ட் வைத்திருப்பவர் தனது கார்ட்டின் பாவனையை உடனடியாக நிறுத்துவதுடன், அத்தகைய கணக்குடன் இணைந்த

டெபிற் கார்ட்டை அழித்துவிடுதலும் திருப்பிக்கொடுத்தலும் வேண்டும். HSBC ஆனது கணக்கிலுள்ள மீதிகளை கணக்கு வைத்திருப்பவருக்குத் திருப்பிக்கொடுப்பதற்கு முன்னர், கணக்கில் இன்னமும் பற்று வைக்கப்படாமல் நிலுவையாகவுள்ள எவையேனும் கொடுக்கல் வாங்கல்கள் இருப்பின், அத் தொகைகளைக் கழித்துக்கொள்ளும்.

3) டெபிற் கார்ட் வங்கியின் சொத்தாகும். வங்கி வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில், அது உடனடியாகவும் நிபந்தனையின்றியும் வங்கிக்குத் திருப்பிக்கொடுக்கப்பட வேண்டும். கார்ட் வைத்திருப்பவர், டெபிற் கார்ட்டை கையளிப்பதற்கு முன்னர், சம்பந்தப்பட்ட வங்கி அலுவலரின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

4) டெபிற் கார்ட் வசதியை உடனடியாக முடிவுறுத்துவதற்கு HSBC உரித்துடையது. பின்வரும் நிகழ்வுகளுள் எதுவேனும் இடம்பெறும் பட்சத்தில் டெபிற் கார்ட் திருப்பிக்கொடுக்கப்பட வேண்டும்:

   i. இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகத் தவறுதல்.
   ii. HSBC யுடன் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் கீழான அல்லது அது போன்றதொரு பொறுப்பின் கீழான (எதிர்பாராதது அல்லது வேறு வகையானது) தவறுகை நிகழ்வொன்று ஏற்படுதல்.
   iii. கணக்கு வைத்திருப்பவர்(கள்) ஏதேனும் வங்கி முறிவு அல்லது கடனிறுக்க வகையறவு தொடர்பான அல்லது வழக்கு நடவடிக்கைகளுக்கு அல்லது ஒத்த தன்மையினவான வழக்கு நடவடிக்கைகளுக்கு ஆளாதல்.
   iv. கார்ட் வைத்திருப்பவர் மரணமடைதல்.
   v. கணக்கை மூடிவிடுதல் அல்லது கணக்கில் ஆகக் குறைந்த சராசரி மீதியைப் பேணத் தவறுதல்.

## பொது

1) கணக்கு வைத்திருப்பவர்(கள்) தமது முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்களில் ஏதேனும் மாற்றம் ஏற்படுமாயின் அது பற்றி எழுத்தில் உடனடியாக HSBCக்கு அறிவிக்க வேண்டும்.

2) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளினால் பிணிக்கப்படுவதற்கு ஒன்றிற்கு மேற்பட்ட ஆட்கள் கையொப்பமிட்டால் அல்லது உடன்பட்டால், இதன் கீழ் அத்தகைய ஆட்களின் கடப்பாடு கூட்டானதாகவும் தனித்தனியானதாகவும் இருக்கும். சந்தர்ப்பம் தேவைப்படுத்துமிடத்து, இதன்கண் ஒருமையை மட்டும் குறிக்கும் சொற்கள் பன்மையையும் உள்ளடக்குவதாகக் கருதப்படும் அத்தகைய ஆட்களுள் எவரேனுமொருவருக்கு இதன் கீழ் வழங்கப்படும் ஏதேனும் அறிவித்தல் அத்தகைய எல்லா ஆட்களுக்கும் பொருத்தமுள்ள அறிவிப்பாகக் கருதப்படும்.

3) வங்கியானது கார்ட் வைத்திருப்பவருக்கும் மேலதிகக் கார்ட் வைத்திருப்பவருக்கும் டெபிற் கார்ட்களைக் கையளிப்பதற்கான அதன் பிரதிநிதியாக, ஒப்படைக்கும் சேவைக் கம்பெனியொன்றுடன் ஒப்பந்தம் செய்யலாம். கார்ட் வைத்திருப்பவரும் மேலதிக அட்டை வைத்திருப்பவரும டெபிற் அட்டைகளைப் பெறும்போது தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதுடன், டெபிற் கார்ட் கிடைக்கப்பெற்றதை உடனடியாக அறிவிக்கவும் வேண்டும்., டெபிற் கார்ட்டை ஒப்படைக்கும் நோக்கத்துக்காக கார்ட் வைத்திருப்பவரினால் குறித்துரைக்கப்பட்ட முகவரியில் கார்ட் வைத்திருப்பவரின் பிரதிநிதியாகவிருப்பதற்கு வங்கியினால் அல்லது அதன் பிரதிநிதியினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு மூன்றாம் தரப்பினரிடமும் வங்கி அல்லது அதன் பிரதிநிதி, தனது தற்றுணிபின் பேரில், டெபிற் அட்டையைக் கையளிக்கலாம். டெபிற் கார்ட் அவ்வாறு ஒப்படைக்கப்படும் நேரத்திலிருந்து கார்ட் வைத்திருப்பவர், டெபிற் கார்ட் மூலம் செய்யும் எல்லா மீளப்பெறுதல்களுக்கும் பொறுப்பாளியாக வேண்டும். கார்ட் வைத்திருப்பவரின் சார்பில், ஏதேனுமொரு கிளையில் டெபிற் அட்டையைக் கையேற்பதற்கு கார்ட் வைத்திருப்பவர் தனது தற்றுணிபின் பேரில் மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கலாம். கார்ட் வைத்திருப்பவரினால் அல்லது அவரது சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் டெபிற் கார்ட் ஏற்றுக்கொள்ளப்பட்ட நேரத்திலிருந்து டெபிற் கார்ட்டைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட எல்லா மீளப்பெறுதல்களுக்கும் கார்ட் வைத்திருப்பவர் பொறுப்பாளியாவார்.

4) டெபிற் கார்ட்டானது, கார்ட் வைத்திருப்பவரின் பாவனைக்காக மட்டுமே வழங்கப்படுகின்றது. அதனை ஏதேனுமொரு வழியில் கைமாற்றவோ அல்லது பிணையாகச் சமர்ப்பிக்கவோ முடியாது.

5) அறிவிக்கப்பட்டவாறான எவையேனும் பொருத்தமான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய, தற்போது வழங்கப்படும் அல்லது எதிர்காலத்தில் அவ்வப்போது கிடைக்கக்கூடிய சேவைகளின் கீழ் சகல ATM கொடுக்கல் வாங்கல்களையும் வணிகத் தாபனங்களுடனான கொடுக்கல் வாங்கல்களையும் செய்வதற்கான உரிமையை கார்ட் வைத்திருப்பவர் தனது டெபிற் கார்ட் மூலம் பெறுகிறார்.

6) வைப்பிலிடும் நேரத்தில் ATM இனால் வழங்கப்படும் விபரக்கூற்றுச் சீட்டு, கார்ட் வைத்திருப்பவர் வைப்பிலிட்டதாகக் கொள்ளுகின்றதை மட்டுமே குறிக்கின்றது. அது வங்கியைப் பிணிக்கமாட்டாது. டெபிற் கார்ட்டை பயன்படுத்தி ATM ஊடாக வைப்பிலிடப்பட்டனவாகச் சொல்லப்பட்ட எவையேனும் பணம் அல்லது காசோலைகளின் பணத்தொகை கார்ட் வைத்திருப்பவரின் கணக்கில் வரவுவைக்கப்பட்டு மீளப்பெறுதல்களுக்காகக் கிடைக்கக்கூடியனவாக இருக்கும் வரை, கார்ட் வைத்திருப்பவர் பணத்தை மீளப்பெற முடியாது.

7) டெபிற் கார்ட்டின் எல்லா மாற்றீடுகளும் புதுப்பித்தல்களும் அந்தந்த நேரத்தில் வலுவிலிருந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்.

8) வங்கிக்கு ஏதேனும் தொடர்பாடலை வழங்குவதற்கு அஞ்சல் வைப்பு வசதியைப் பயன்படுத்துதலும், வங்கியின் பதிவேடுகளும், அத்தகைய தொடர்பாடல்களின் தன்மை மற்றும் அவை வங்கியினால் பெறப்பட்ட நேரம் என்பவற்றிற்கு முடிவான சான்றாதல் வேண்டும். அவ்வாறு வைப்பிலிடப்பட்ட தொடர்பாடல்களிலான ஏதேனும் தெளிவின்மைக்கு கார்ட் வைத்திருப்பவரே பொறுப்பாதல் வேண்டும்.

9) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள், டெபிற் கார்ட் எந்த நாட்டில் வழங்கப்பட்டதோ அந்த நாட்டில் அப்போதைக்கு வலுவிலிருந்த சட்டங்களினால் ஆளுகை செய்யப்படுவதுடன், அவற்றிற்கு அமைவானவையாகவும் கொள்ளப்படும்.

10) கார்ட் வைத்திருப்பவர் ஒரு டெபிற் கார்ட்டை மட்டுமே தன்வசம் வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன், மாற்றீட்டு டெபிற் கார்ட் வழங்கப்படும்போது ஏற்கனவே வைத்திருந்த கார்ட்டை இரத்துச்செய்ய வங்கிக்கு அதிகாரமளித்தலும் வேண்டும்.

11) டெபிற் கார்ட் ஓராண்டுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்குப் பயன்படுத்தப்படாவிட்டால் அதன் செல்லுபடியாந்தன்மை முடிவுறுமென்பதை கார்ட் வைத்திருப்பவர் கவனிக்க வேண்டும். வணிகத் தாபனங்களிலான மீளப்பெறுகைகளும் பணப் பரிமாற்றங்களும் கொடுக்கல் வாங்கல்களும் மாத்திரமே கொடுக்கல் வாங்கல்களாகக் கொள்ளப்படும்.

12) டெபிற் கார்ட்டை பயன்படுத்துவதன் மூலம் தொழிற்படுத்தப்படக்கூடிய ஒரு வலையமைப்பின் பகுதியாக அமைகின்ற ஏனைய வங்கிகளினால் நிறுவப்பட்ட ATMகளைப் பயன்படுத்தும்போது, ஏனைய வங்கிகளினால் அவற்றுக்கான இறுப்பனவு செய்யப்பட்ட சகல கொடுக்கல் வாங்கல்களும் கொடுக்கல் வாங்கல்களாகக் கொள்ளப்படும்.

13) நடப்புக் கணக்குகள் மற்றும் சேமிப்புக் கணக்குகளின் தொழிற்பாட்டை ஆளுகின்ற சகல விதிகளும் பிரமாணங்களும், டெபிற் கார்ட்டை பயன்படுத்தி அத்தகைய கணக்குகளில் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்குப் பொருத்தமுடையனவாகும்.

14) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் எதனையும் சேர்ப்பதற்கான, அவற்றுள் எவற்றையும் நீக்கிவிடுவதற்கான மற்றும்/அல்லது வேறுபடுத்துவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. அத்தகைய மாற்றப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகள் HSBC இணையத்தளத்தில் காண்பிக்கப்படும். அத்துடன் அதன் பிரதியை வேண்டுகோளின் பேரில் பெறவும் முடியும். (வங்கியின் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் செய்யப்படும் ஏதேனும் மாற்றம் எத்தேதியன்று அமுலுக்கு வருகின்றதோ அத்தேதிக்குப் பின்னர் டெபிற் அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் கார்ட் வைத்திருப்பவர் அத்தகைய மாற்றத்தை ஏற்றுக்கொண்டவராகக் கருதப்படுவார்.. கார்ட் வைத்திருப்பவர் அத்தகைய ஏதேனும் மாற்றத்தை ஏற்காதுவிடின், அத்தகைய மாற்றம் அமுலுக்கு வருகின்ற தேதிக்கு முன்னர் கார்ட்டை வங்கிக்குத் திருப்பிக்கொடுக்க வேண்டும்.

15) தபால் அனுப்பப்படும் ஏதேனும் அறிவித்தல், எழுத்தில் வங்கிக்குக் கடைசியாகக் கொடுக்கப்பட்ட முகவரிக்குத் தபாலில் அனுப்பப்பட்ட திகதியிலிருந்து 7 நாட்களினுள் காா்ட் வைத்திருப்பரினால் பெறப்பட்டுள்ளதாகக் கருதப்படும். கட்டணங்கள், இறுப்பனவுகள் மற்றும்/அல்லது விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குமான மாற்றங்கள் பற்றிய அறிவித்தல, கடிதம் மூலம் மற்றும்/அல்லது உள்நாட்டுப் பத்திரிகைகளிலான அறிவித்தல் மூலம் மற்றும்/அல்லது வங்கியின் அறிவித்தல் பலகைகளில் பாா்வைக்கு வைக்கப்படும் விளம்பரங்கள் மூலம் மற்றும்/அல்லது விபரக்கூற்றுச் செய்திகள் ஊடாகக் கொடுக்கப்படுதல், காா்ட் வைத்திருப்பவருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

16) காா்ட் வைத்திருப்பவர் தனது டெபிற் காா்ட்டை பயன்படுத்துவதன் மூலம், கணக்கிலுள்ள மீதிக்கு அல்லது HSBC இனால் அனுமதிக்கப்பட்ட மேலதிகப் பற்று உச்சவரம்பிற்கு மேலானதொரு தொகையை மீளப்பெற்றால், காா்ட் வைத்திருப்பவர், HSBCஇனால் தீா்மானிக்கப்படும் வீதத்தில் விதிக்கப்படும் வட்டியுடனும் தண்டங்களுடனும், மேலதிகமாகப் பெறப்பட்ட முழுத் தொகையையும் உடனடியாகவும் நிபந்தனையின்றியும் HSBC க்குச் செலுத்த வேண்டும். எவ்வாறாயினும், HSBC ஏதேனும் மேலதிகப்பற்று வசதியை அளிப்பதற்கு வெளிப்படையாக அல்லது உட்கிடையாக இணங்கியுள்ளதென இதனைப் பொருள்கொள்ளக் கூடாது.

17) ATM இன் அல்லது டெபிற் காா்ட்டின் ஏதேனும் செயலிழப்பு, நிதிகளின் தற்காலிகப் போதாமை, ஏதேனும் பிணக்கு போன்றவற்றின் (நேரடி அல்லது நேரடியற்ற) காரணங்களினால் அல்லது கட்டுப்பாட்டுக்கப்பாற்பட்ட வேறு சூழ்நிலைகள் காரணமாக, ஏதேனும் சேவையை வழங்குவதற்கு அல்லது அதன் கீழ் ஏதேனும் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கு வங்கி தவறுமாயின், அத் தவறுகைக்கு வங்கி பொறுப்பேற்கத் தேவையில்லை

18) கணக்குகளுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை தொடா்பில் அல்லது அதன் அல்லது அவற்றின் தொழிற்பாடு சம்பந்தமாக அல்லது டெபிற் காா்ட்டின் பயன்பாடு சம்பந்தமாக, பாதுகாப்பு மீறுகையை அல்லது வேறு சந்தேகத்துக்கிடமான சூழ்நிலைகளை அறியும் பட்சத்தில் அல்லது அவ்வாறு சந்தேகிக்கும் பட்சத்தில், வங்கியானது, அதன் தனித் தற்றுணிபின் பேரிலும் ஏதேனும் பொறுப்புக்கள் இல்லாமலும் ஏதேனும் கொடுக்கல் வாங்கலுக்கான அதிகாரவளிப்பை மறுக்க முடியும்.

வங்கி இயன்றளவு விரைவாக இது குறித்து கார்ட் வைத்திருப்பவருக்கு அறிவிக்க வேண்டும்.

19) டெபிற் காாடடினதும் அதனுடன் தொடர்புடைய PIN இலக்கத்தினதும் வழங்குகை/பாவனை/தொலைவு காரணமாக அல்லது அது தொடர்பாக விளைகின்ற அல்லது நேரடியற்ற முறையில் ஏற்படுகின்ற நட்டம் அல்லது சேதம் உள்ளிட்ட ஏதேனும் நட்டத்திற்கு அல்லது சேததத்திற்கு HSBC பொறுப்பாளிாகாது.

20) டெபிற் கார்ட்டின் பாவனையானது, இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக VISA வழிகாட்டு நெறிகளுக்கும் அமைந்ததாக இருக்க வேண்டும்.

21) கார்ட் வைத்திருப்பவா் தனது டெபிற் கார்ட்டின் மூலம் வணிக நிலையங்களில் நிலையான அறிவுறுத்துதல்களை ஏற்படுத்த முடியாது.

22) அட்டை வைத்திருப்பவரால் அல்லது அவரது சார்பாக தொலைபேசி, டெலெக்ஸ், தொலைநகல், குறுஞ்செய்திச் சேவை ("SMS"), தனிப்பட்ட இணையத்தள வங்கி சேவை ("PIB") அல்லது மின்னஞ்சல் மூலம் காலத்திற்குக் காலம் விடுக்கப்படும் அல்லது விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் ஏதேனும் அறிவித்தல் மற்றும் அறிவுறுத்தல், கோரிக்கை ("அறிவுறுத்தல்கள்") தொடர்பில், வங்கியானது அத்தகைய அறிவுறுத்தல் வழங்கியவரின் அதிகாரத்தை அல்லது அடையாளத்தை விசாரிக்காமலும், அறிவுறுத்தல் பெறப்பட்ட நேரத்தில் நிலவிய சூழ்நிலைகளைக் கருத்தில் கொள்ளாமலும், அத்தகைய அறிவுறுத்தலில் நம்பிக்கை வைத்துச் செயற்பட அட்டை வைத்திருப்பவர் வங்கிக்கு அதிகாரம் அளிக்கின்றார். அட்டை வைத்திருப்பவருடன் தொடர்பு கொள்வதற்கு தொலைபேசி, டெலெக்ஸ், தொலைநகல், குறுஞ்செய்திச் சேவை, தனிப்பட்ட இணையத்தள வங்கி சேவை அல்லது மின்னஞ்சல் சேவையை வங்கி பயன்படுத்தலாம். அட்டை வைத்திருப்பவர் பெறப்பட்ட அறிவுறுத்தல் பெறப்பட்ட நேரம்/திகதி தொடர்பாக வங்கியின் தீர்ப்பே இறுதியானது என்பதை அட்டை வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கிறார்.

அட்டை வைத்திருப்பவரினால் பூரணமாக அங்கீகரிக்கப்பட்டதாகவும், அட்டை வைத்திருப்பவரினால் பூரணமாக அங்கீகரிக்கப்பட்டும் அவர் மீது பிணிப்புடையதாகவும், அறிவுறுத்தல்களைக் கவனிப்பதற்கு வங்கிக்கு உரிமையுண்டு. வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் பணக் கொடுப்பனவு சம்பந்தப்பட்டவையாக அல்லது ஏதேனும் கணக்கில் பற்று வைத்தல் அல்லது வரவு வைத்தல் சம்பந்தப்பட்டவையாக அல்லது ஏதேனும் பணத்தை அல்லது ஆவணத்தைக் கொடுத்துத் தீர்த்தல் சம்பந்தப்பட்டவையாக அல்லது அட்டை வைத்திருப்பவரை வங்கியுடன் அல்லது வேறொரு நபருடன் ஏதேனும் உடன்படிக்கையில் அல்லது ஏற்பாட்டில் பிணைக்கும் நடவடிக்கை சம்பந்தப்பட்டவையாக அல்லது அட்டை வைத்திருப்பவரை வேறேதும் கொடுக்கல் வாங்கலுடன் அல்லது ஏற்பாட்டுடன் தொடர்புபடுத்துவவையாக இருந்தாலும், கொடுக்கல் வாங்கல்களின் தன்மையை அல்லது ஏற்பாட்டை அல்லது சம்பந்தப்பட்ட பணத் தொகையை மற்றும் ஏதேனும் தவறுகையை கருத்திற் கொள்ளாமலும், காரணம் கற்பித்தல், தவறாகப் புரிந்துகொள்ளல் அல்லது அறிவுறுத்தல்கள் தொடர்பான நியதிகளின் தெளிவின்மை என்பவற்றைக் கருத்திற் கொள்ளாமலும், அந்த அறிவுறுத்தல்கள் அட்டை வைத்திருப்பவரினால் அதிகாரமளிக்கப்பட்ட மற்றும் அவரைப் பிணைக்கின்ற அறிவுத்தல்களே என்று நம்பிக்கை வைத்து, நடவடிக்கை எடுக்க வங்கிக்கு உரிமையுண்டு.

இந்த அதிகாரமளிப்பு மற்றும் இழப்பெதிர்காப்பு விதிகளுக்கேற்ப, வங்கியின் செயற்பாட்டைக் கருத்திற் கொண்டு வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்கவும் அறிவுறுத்தல்களினால் அல்லது அறிவுறுத்தல்களின் விளைவாக எந்த வகையிலேனும் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் மற்றும் வங்கியால் உறப்பட்ட அல்லது தாங்கிக் கொள்ளப்பட்ட இழப்புக்கள், உரிமைக் கோரிக்கைச் செயல்பாடுகள், சட்ட நடவடிக்கைகள், கோரிக்கைகள், சேதங்கள், கிரயங்கள், வேறு செலவினங்கள் என்பனவற்றுக்கெதிராக வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்கப்பட்டுள்ளதென்பதை அட்டை வைத்திருப்பவர் இத்தால் எவ்வித தயக்கமுமின்றி ஏற்றுக்கொள்கிறார்.

அட்டை வைத்திருப்பவரிடமிருந்து முடிவுறுத்தல் அறிவித்தல் வங்கிக்கு கிடைத்து, அத்தகைய அறிவித்தல் மீது நடவடிக்கை எடுப்பதற்கு வழங்கப்பட்ட ஒரு நியாயமான காலம் முடிவடையும் வரை, இந்த அதிகாரமளிப்பு மற்றும் இழப்பெதிர்காப்பு விதிகள் முழு வலுவிலும் நடைமுறையிலும் இருக்கும். அத்தகைய முடிவுற்றலானது, இந்த விதிகளுக்கு அமைவாக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட செயல்களினால் உறப்பட்ட ஏதேனும் பொறுப்புக்களிலிருந்து அட்டை வைத்திருப்பவரை விடுவிக்காது. பற்று அட்டையின் வழங்கல் மற்றும் பாவனையானது காலத்துக்குக் காலம் அமுலில் இருக்கக்கூடிய ஏற்புடைய சட்டங்கள், சட்டவிதிகள், ஒழுங்குவிதிகள், VISA வழிகாட்டல்கள் மற்றும் HSBCயின் நியதிகளுக்கு

அமைவானதாக இருக்கும். வங்கிக்கு வழங்கப்பட்ட சகல அதிகாரங்களும் தத்துவங்களும் மாற்ற முடியாதவை. இந்த நியதிகள் இலங்கை சட்டங்களினால் ஆளுகை செய்யப்படுவதுடன், அவற்றிற்கு அமைவானவையாகவும் கொள்ளப்படும். சகல பிணக்குகளும் (இந்த விடயத்தில் சம நியாயாதிக்கமுள்ள வேறு நிதிமன்றங்கள் இருந்தாலும்) இலங்கை நீதி மன்றங்களின் பிரத்தியேகமான நியாயாதிக்கத்துக்கு உட்பட்டவையாக இருக்கும்.

**INT-LO-CON.TAM 2016.1**